பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 12 புதன்கிழமை 25.03.2025 கதிர் 138

### இது ரகசியம் அல்ல!

நேற்றைய யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தைப் பார்த்த பின்னர், நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்த யாழ்ப்பாணத்து மக்களில் ☞ 2

# ஆளும்தரப்பினது வாக்குகள் இம்முறை சிதறப்போகின்றன

## ஐக்கிய மக்கள் சக்தி உறுதி

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக்குச் சவாலாக அமைந்துள்ளது. இந்த தேர்தலில் அவர்களின் வாக்குகள் சிதறப் போகின்றன. ஆனால் எமக்கு 18 இலட்சம் மேலதிக வாக்குகள் கிடைக்கவுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது மாவட்டத்துக்கு மாவட்டம் சென்று மக்கள் சந்திப்புக்களை நடத்தி வருகின்றோம். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் அவற்றில்



பங்கேற்று வருகின்றார். இந்த தேர்தல் எமக்கு ☞ 9

## ஜனநாயகக் கூட்டணி யாழ். மாவட்டத்தில்

# சகல சபைகளையும் வெல்லும் வாய்ப்பை தட்டிவிட்டார்களாம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்துஉள்ளூராட்சிசபைகளையும் ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணி வெல்லக்கூடிய வாய்ப்பு 9 சபைகளின் வேட்புமனுக்கள் நிராகரிப்பட்டதால் தடுக்கப்பட்டுவிட்டதாக புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்தார். அதனால் வேட்புமனு நிராகரிப்பை எதிர்த்துஉயர்நீதிமன்றத்தில்வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

''யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனைத்துஉள்ளூராட்சிசபைகளிலும் வெல்லக் கூடிய வெற்றி வாய்ப்புகள் இம்முறைஜனநாயகத்தமிழ்க்தேசியக் கூட்டணிக்கு இருந்த நிலையில் 9 சபைகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளோம்'' என்றார் அவர்.

யாழ். மாவட்டம், சுன்னாகம் பகுதியில் அமைந்துள்ள தனது அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## உண்மையை ஏற்றுக்கொண்டு

# பிரிட்டன் விதித்துள்ள தடைக்கு வரவேற்பு

பல ஆண்டுகளுக்குப் பின்னர், இப்போர்க்குற்றவாளிகளால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக் கானவர்கள். தஞ்சம் புகுந்துள்ள நாடுகளில் ஒன்றான பிரித்தானி யாவினால் இவர்கள் பற்றிய உண்மை இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப் பதையிட்டு நாம் மகிழ்வடைந்துள்ளோம். போர்க்குற்றவாளிகள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கை நபர்கள் மீது பிரித்தானியா மக்னஸ்கி சட்டத்தின் கீழான தடையை அறிவித்துள்ளமையை வரவேற்கின்றோம்என்றுசர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில்அவ்வமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர்யஸ்மின் சூக்கா விடுத்துள்ள ஊடக ☞ 2

# வேட்புமனு நிராகரிப்பை எதிர்த்து நீதிமன்றம் சென்றது மணி தரப்பு

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் மாநகர சபை உள்ளிட்ட 3 உள்ளூராட்சி சபைகளில் தமது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பாக மணிவண்ணன் தரப்பு வழக்குத் ☞ 8

# பிரிவினைவாதிகள் தமது முயற்சிகளில் விடாமுயற்சியுடன் சுறுசுறுப்பாயுள்ளனர்

## முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் கருத்து

பிரிவினைவாதப் புலம்பெயர்ந்தோர் முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு மிகவும் சுறுசுறுப்பாகவும், மூலோபாய ரீதியாகவும், விடாமுயற்சியுடனும்உள்ளனர்என்பதைபிரிட்டனின் தடை அறிவிப்புகள் வெளிப்படுத்துகின்றன என்று இலங்கையின் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்

பிரிட்டன் இலங்கை இராணுவ மற்றும் கடற்படையின் முன்னாள் தளபதிகள் மற்றும் கருணாவிற்கு எதிராக விதித்துள்ள தடைகள் குறித்த தனது கருத்தை அவர் சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

# "பிரிட்டன் தடை ஒருதலைப்பட்சம்" கொதிக்கிறார் முன்னாள் அமைச்சர்

இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதிகளான சவேந்திர சில்வா, ஜகத் ஜெயசூரிய, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட ஆகியோருக்கு பிரிட்டன் விதித்துள்ள தடை முற்றிலும் ஒருதலைபட்சமானது. பிரித்தானியாவின் இந்ததீர்மானத்தை இலங்கை ஆளும்தரப்பு முற்றாக நிராகரிக்கவேண்டும் என்று முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கையின் பாதுகாப்பு துறையின் முன்னாள் உயர் அதிகாரிகள் மூவர் மீதும் விடுதலைப் புலிகளின் -முன்னாள் தளபதி



கருணா மீதும் பிரிட்டன் விதித்துள்ள தடை தொடர்பில் குறிப்பிடுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். ☞ 9

# அரசியல் கைதிகளை விடுவிக்காமல் மீண்டும் பொய் வாக்குறுதிகளுடன் தேர்தலில் என்.பி.பி.

## மக்கள் போராட்ட முன்னணி காராசாரம்

பத்தொன்பது வயதில் கைதுசெய்யப்பட்ட சிவகுமார், பார்த்தீபன் என்ற இருவர் முப்பது வருடங்கள்கடந்தும்இன்று30வருடங்கள்கடந்து 50 வயதாகியும் விடுதலை இன்றிச் சிறையில் உள்ளனர் என தெரிவித்துள்ள மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந் ☞ 8

# காங்கேசன் ஜனாதிபதி மாளிகைக்கான திட்ட முன்மொழிவு கோரப்படுகின்றது

## காணிகளைச் சுவீகரிக்கவும் நடவடிக்கை

காங்கேசன்துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை பயன்படுத்து வதற்கு முறையான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக் குமாறு யாழ். மாவட்ட ஒருங் கிணைப்பு குழு கூட்டத்தில் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் குழுவின் தலை வரும் அமைச் சரு மான சந்திரசேகரன்தலைமையில் நேற்று இடம்பெற்ற கூட் டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக் கப்பட்டது.

காங்கேசன் துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை விடுவிப்பதற்கு பொருத்தமான திட்ட முன் மொழிவை சமர்ப்பிக்கு மாறு ஜனாதிபதியால் கோரப் பட்டுள்ளது. இதற்கு அமைய ஜனாதிபதி மாளி கைக்கான காணியை சுவீகரிப்பதற்கான நடவடிக்கையைதெல்லிப்பழை பிரதேசசெயலகம்முன்னெடுத்து வருகிறது. எனவே, காங்கேசன் துறையில் உள்ள ☞ 8

## நாமல் எம்.பி. கருத்து

# இலங்கையில் நடந்து முடிந்த போர் ஓர் இனத்திற்கு எதிரானதல்லவாம்

இலங்கையில் நடைபெற்றது பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடே தவிர ஓர் இனக் குழுவுக்கு எதிரானதல்ல. சிறப்புச் சலுகைகளைபெற்றுக்கொள்ளும் நோக்கத்தில்ஒருசிலதமிழ் ☞ 8

# போதை தலைக்கேறி இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் அதீத போதை காரணமாக இளைஞன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியை சேர்ந்த 30 வயதுடைய இளைஞன் ஒருவர் ஹெரோயின் ☞ 8

## இனி இது .....

ஒரு பகுதியினரைப் பார்த்து "இதற்குத்தானா ஆசைப்பட்டாய் பாலக்குமாரா" என்றுதான் கேட்கவேண்டும் போன்று தோன்றியது. என்னுடைய சுமார் 30 வருட ஊடக வாழ்க்கையில் நேற்றைய கூட்டம் மாதிரி ஒரு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைப் பார்த்ததில்லை.

கடந்த காலங்களிலும் அமைச்சர்டக்ளஸுக்கும் தமிழ்த் தேசியக் கட்சி என்று சொல்லும் கட்சிகளுக்கும் இடையே அவ்வப்போது கருத்து மோதல்கள் ஏற்பட்டு அபிவிருத்திக் குழுக் கூட்டம் அரசியல் மேடையாகி வீணாய்ப்போன பல சந்தர்ப்பங்கள் நடந்துள்ளன. ஆனால், அவையும்கூட ஒரு பொது நோக்கம் கருதியவையே தவிர, தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய மோதல்களாக இருந்ததில்லை. எந்த நாடாளுமன்ற உறுப்பினருமோ அதிகாரியுமோ அமைச்சருமோ தனது மதிப்பார்ந்த வரம்புகளை மீறிப் பேசியதோ நடந்ததோ இல்லை.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இதற்கு முன்னரும் உணர்ச்சிவசப்பட்ட எத்தனையோ மனிதர்களை இதற்கு முன்னரும் சந்தித்திருக்கிறது. அவர்களும்கூட வரைமுறை தாண்டி வார்த்தைகளை விட்டதில்லை. நேற்றைய கூ-ட்டத்தில் அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து "டோய் டோய்" என்று மரியாதையற்று விழிக்கின்றார். ஒருவேளை, அது அவரது பகுதிகளில் மரியாதையற்ற வார்த்தையாக இல்லாது, வழக்கமாகப் புழக்கத்திலுள்ள வார்த்தையாகக்கூட இருக்கலாம். ஆனால், போர்க் காலத்தில் சோதனைச் சாவடிகளில் "ஏற்" என்று சிப்பாய்கள் அழைப்பதையே மரியாதைக்குறைவாகக்கருதிகுமைந்தவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள் என்பது அமைச்சர் சந்திரசேகரனுக்குத் தெரியாமலிருக்கலாம். சிங்களவர்கள் மத்தியில் ''ஏய்'' என்பது வழக்கமான வார்த்தைதான். ஆனால் தமிழர்களுக்கு மரியாதைக்குறைவானது. அப்படிப்பட்ட இடத்தில் ஒரு உயர் பொதுச் சபையில் உயர் மதிப்புக்குரியவர்கள் மற்றவர்கள் முன்னிலையில் டோய் என்று அழைப்பது யாழ்ப்பாணத்தவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத மரியாதைக் குறைவு என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது. அப்படி அழைக்கப்பட்டவர்கள் எத்தகைய தவறைச் செய்திருந்தாலும் அவர்கள் மக்கள் பிரதிநிதிகள், அவர்களை மரியாதைக் குறைவாக நடத்த எவருக்கும் உரிமையில்லை.

ஒருவேளை, அப்படி அழைக்கப்பட்டவர்களில் ஒருவர் ஜேவிபி உறுப்பினர், ஜேவிபி என்பது ஒரு இயக்கம், இயக்கத்திற்குள் இராணுவ அதிகாரக் கட்டமைப்பே இயங்கும், அதனால் மேலதிகாரி கிழே உள்ளவரை எப்படி வேண்டுமானாலும் விழிக்கலாம் என்று அமைச்சர் நினைத்திருக்கலாம். ஆனால், அப்படி அழைப்பதானால் அதனைக் கட்சி அலுவலகத்தில்தான் அவர் செய்யவேண்டுமே தவிர, பொது இடத்தில் அல்ல. 'அடோய்' என்று அழைத்தும் அமைச்சரால் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது என்பது வேறுவிடயம். இந்த அமைச்சர் ஆளுமையற்றவர் என்ற கருத்துப் பரவுவதற்கு அவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுமே சேர்ந்து காரணமாகியிருந்தனர் என்பதும் வேறுவிடயம்.

மூன்று இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று நடந்த வாக்குவாதங்களைப் பார்க்கும்போது அவர்கள் இன்னும் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகமட்டங்களின் மனோநிலையில் இருந்து வெளியேவரவில்லையோ என்று தோன்றியது. இவ்வளவு பொறுமை இன்றிய, பொதுச் சபையில் தனிப்பட்ட வாழ்க்கையின் இழிவுகளைப் பேசக்கூடாது என்கிற நாகரிகம்கூடத் தெரியதவர்களாக, மக்கள் பிரதிநிதிகளாகச் சிந்தித்து சிறப்பான முடிவுகளை எடுக்கப்போகிறார்கள் என்ற கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை.

மக்கள் முறைமை மாற்றத்திற்கு வாக்களித்தார்கள் என்பது உண்மையானால், அது நிச்சயமாக இந்த மாற்றமாக இருக்க முடியாது என்றே நம்புகின்றேன். அவர்கள் முன்னர் இருந்த வயதான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தூங்குகிறார்கள் என்று கோபமாகித்தான் இளம் வாக்களர்களுக்கு வாக்களித்தார்கள். இப்போது இளம் அரசியல்வாதிகளோ, வாயைத் திறக்காமல் தூங்கினாலே போதும் போலும் என்கிற நிலைக்கு மக்களைத் தள்ளிவிட்டார்களோ என்று தோன்றுகின்றது.

அதனால்தான் இவர்களுக்கு வாக்களித்தவர்களைப்பார்த்து "இதற்குத்தானா ஆசைப்பட்டாய் பாலகுமாரா?" என்று கேட்கத் தோன்றுகின்றது.

.............................................................

தேர்தலில் தமது வேட்புமனுக்கள நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து அரசியல் கட்சிகள் உயர் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்யத் தொடங்கிவிட்டன. யாழ். மாநகர சபையைப் பிரதான இலக்காகக் கொண்டு களமிறங்கிய மணிவண்ணன் தரப்பு நேற்று தனது மனுவைத் தாக்கல் செய்தது. யாழ். மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பிலான மூன்று மனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று மாந்தை மேற்கில் தமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக தமிழ் அரசுக் கட்சியும் உயர் நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

இன்றும் நாளையும் அடுத்த வாரத்தின் முற்பகுதியிலும் இன்னும் பல மனுக்கள் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவை அடுத்த வாரத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 400 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை எதிரத்து நூற்றுக்கணக்கான மனுக்கள் உயர் நீதிமன்றத்திற்கு வரலாம் என்கிற காரணத்தால், அவற்றை விசாரிப்பதற்கான கால அளவு பெரிதானதாக அமையலாம். இதனால், சில விடயங்களில், குறிப்பாக இளைஞர்களின் வயதை நிரூபிக்கும் பிறப்புச் சான்றிதழ் விவகாரத்தில் உதவிப் பதிவாளர் அத்தாட்சிப்படுத்தாததற்காக நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளலாம் என்று நீதிமன்றத்தில் இணங்கிக்கொள்ள தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாக அறியமுடிகின்றது.

சட்டத்தில் உறுதிப்படுத்திய பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அப்படியானால் அது உதவிப் பதிவாளரின் கையொப்பத்தையே குறிக்கும் என்றாலும் பல வேட்புமனுக்கள் சமாதான நீதிவான்களின் உறுதிப்படுத்தல்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சட்ட வாதங்கள் புரிந்து காலத்தைக் கடத்தாமல் அத்தகையவற்றை ஏற்றுக்கொள்ளலாம் என்று நீதிமன்றத்தில் இணங்கிப் போவதன் மூலம் மூன்றிலொரு பங்கு வழக்குகளின் சுமைகளையாவது குறைக்கலாம் என்று ஆணைக்குழு கருதுவதாகத் தெரிகின்றது.

ஏனைய வழக்குகள் ஒவ்வொன்றும் அவற்றின் தனித் தனிக் காரணங்கள் தொடர்பாக ஆராயப்பட்ட பின்னரே முடிவு செய்யப்படும்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## பிரிட்டன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் போர்க்கால இராணுவத் தளபதிகள் மூவர் மீதும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட தமிழ் துணை இராணுவக் குழுத் தலைவர் மீதும் மக்னஸ்கி சட்டத்தின்கீழ் பிரித்தானிய அரசு தடை விதித்துள்ளது.

இந்த ஆச்சரியமான முடிவினை பாதிக்கப்பட்டவர்களும் உலகளாவிய மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் வரவேற்றுள்ளனர். இந்த அறிவிப்புக் குறித்து இப்போது எனது உணர்வுகள் எப்படி உள்ளன என்பதை வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாதுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் உள்நாட்டிற்குள் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையினை நான் இழந்துகொண்டிருக்கிறேன். ஆனால், இவ்விடயங்களுக்காகப் போராடிவரும் ஒரு சட்டவாளராகிய எனக்கு இது ஒரு நம்பிக்கைகீற்றினைத் தந்துள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் சமூகங்களுக்கும் சிறிய சந்தோசத்தினைக் இது கொடுக்கும். எமது போராட்டத்தினை நாங்கள் கைவிடப்போவதில்லை என்று வட இலங்கையியைச் சேர்ந்த மனித உரிமைகள் தொடர்பான சட்டவாளர் தெரிவித்தார்.

ஒவ்வொரு போர்க்குற்றவாளிகளும் கொலை, காணாமல்போகச்செய்தல் போன்ற பாரதூரமான வன்முறைகளில் ஈடுபட்டவர்களும் பொறுப்புக்கூறலுக்கு ஆளாக்கப்படுதல் வேண்டும். இந்தச் செய்தியானது என்னைப்போன்ற பாதிக்கப்பட்டவர்களுக்கும் எமது குடும்பங்களுக்கும் நீதிக்காகத் தொடர்ந்தும் போராடுவதற்கான சிறு நம்பிக்கையைக் கொடுக்கின்றது என்று இலங்கையிலிருந்து தப்பிப் பிழைத்து வெளிநாட்டில் வசிக்கும் பாதிக்கப்பட்ட ஒருவர் கூறினார்.

அத்துடன், இந்த ஆண்டு ஓய்வுபெற்ற ஜெனரல் சவேந்திர சில்வா இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின்போது, சட்டவிரோதக் கொலைகள், சித்திரவதைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இராணுவப் படைப்பிரிவு ஒன்றுக்குத் தலைமைதாங்கி வழிநடத்தினார் என்று பிரித்தானிய அரசு இணையத்தில் வெளியிட்ட தடைப்பட்டியிலில் கூறப்பட்டுள்ளது.

படுகொலைகளைச் செய்வதற்கு சவேந்திர சில்வா கட்டளைப் பிறப்பித்தார் என்று நேரடியாகக் குற்றச்சாட்டியுள்ளது. குறிப்பாகச் சரணடைய முயன்ற விடுதலைப்புலித் தலைவர்கள் கொல்லப்படவேண்டுமென ஆணை பிறப்பித்ததுடன், போரின் இறுதி நாட்களில் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களை இவரது தலைமையிலான படையினர் கொலைசெய்த காலப்பகுதியில் இவர் களமுனையிலும் இருந்துள்ளார்.

அது 'வெள்ளைக்கொடிச் சம்பவம்' என்று அறியப்படும் சம்பவத்தினை குறிக்கின்றது. இச்சம்பவத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல்துறை உறுப்பினர்கள், சரணடையுமாறு தூண்டப்பட்டு, நீதிக்குப் புறம்பான முறையில் கொல்லப்பட்டார்கள். ஐ.நா. மேற்கொண்ட விசாரணையும், இத்தலைவர்கள் (ஒருவருடைய மனைவி உட்பட) அங்கிருந்த மூத்த இராணுவத் தலைமைப்பீடத்தின் கட்டளையின்கீழ் படையினரால் படுகொலைசெய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளதென முடிவுசெய்துள்ளது.

இச்சரணடைவு தொடர்பில் 2015ஆம் ஆண்டில் முதன் முதலாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் வெளிக்கொண்டுவந்ததுடன், 2019இல் சவேந்திர சில்வா தொடர்பாக ஆவணம் ஒன்றினையும் வெளியிட்டது. 2021ஆம் ஆண்டில் பிரித்தானியாவிற்கும் கனடாவிற்கும் விவரமான தடைக்கோவைகளையும் இது அனுப்பி வைத்திருந்தது.

''பாதிக்கப்பட்டவர்களதும் அவர்களது குடும்பங்களதும் குருதியும், வியர்வையும் கண்ணீரும் வீணாகிப்போகவில்லை. போர்க்குற்றவாளிகளை அவர்களது கொடூர அட்டூழியங்களுக்கு பொறுப்புக்கூறவைப்பதனை நோக்கிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பிரித்தானிய அரசுக்கு நன்றிகள்" இவ்வாறு போரிலிருந்து உயிர்தப்பி தற்போது பிரித்தானியாவில் வாழும் தமிழர் ஒருவர் கூறினார்.

ஜகத் ஜெயசூரியவுக்கு எதிராக 2017 ஆம் ஆண்டில், உலகளாவிய அதிகார வரம்பு வழக்குகளை இலத்தீன் அமெரிக்காவில் தாக்கல் செய்தது.

சித்திரவதைக்கும், பாலியல் வன்முறைகளுக்கும் பெயர்போன ஜோசப் முகாம் எனப்படும் இராணுவ முகாமிற்குப் பொறுப்பாக இருந்தமை தொடர்பிலேயே இவர் மீது வழக்குகள் தொடரப்பட்டன. அந்த நேரத்தில் இலங்கையின் இராஜதந்திரியாக இருந்த அவர், இதன் விளைவாக பிரேஸிலிருந்து தப்பி, இலங்கைக்குத் திரும்பியிருந்தார். 2019ஆம் ஆண்டு, இரண்டு முறை இவர் அவுஸ்ரேலியாவிற்குப் பயணம் மேற்கொண்டதைத் தொடர்ந்து, சர்வதேச நீதிக்கான ஆஸ்ரேலிய மையத்துடன் இணைந்து, 2020 ஆண்டு, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் இவர் தொடர்பில் ஆஸ்ரேலிய மத்திய பொலிஸாருக்கு 5 முறைப்பாடுகளைச் செய்தது. எனினும் இலங்கைக்கு உள்ளேயே விசாரணை நடைபெறுவதையே தாம் விரும்புவதால் இம்முறைப்பாடு தொடர்பில் தாம் விசாரணை நடாத்தமாட்டோமென 2022ஆம் ஆண்டு ஆஸ்ரேலிய பொலிஸ் துறை தெரிவித்தது.

அதே ஆண்டில், ஜகத் ஜெயசூரிய தொடர்பான 100 பக்கங்களைக் கொண்ட தடை ஆவணம் ஒன்றினை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் பிரித்தானிய அரசிடம் சமர்ப்பித்தது. பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஒரு ஆவணத்தினை அனுப்பி வைத்தது.

போர்க்காலத்தில் கடற்படைத்தளபதியாகவும் -இராஜதந்தியாகவும் இருந்த வசந்த கரன்னகொடவும் தடைசெய்யப்பட்டுள்ளார். இதரவிடயங்களுடன், கிழக்குக்கரையோரத்தில் உள்ள பிரதான கடற்படை முகாமில் நிலக்கீழ் சித்திரவதைக் கூடங்களை வைத்திருந்ததுடன், போர் நடந்த நேரத்திலும் அதற்குப் பின்னரும் பல எண்ணிக்கையிலான மக்கள் சித்திரவதை செய்யப்பட்டதுடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதும் இங்கே நிகழ்ந்தன என்று காணாமலாக்கப்பட்டவருடைய தற்போது ஐரோப்பாவில் வாழும் ஒரு உறவினர் தெரிவித்தார்.

கடற்படைப் புலனாய்வுத்துறையால் கடத்தப்பட்டு, வலிந்து காணாமலாக்கப்பட்ட பிள்ளையின் தாயார் ஒருவர் கூறும்போது, "இது மிகவும் நல்ல செய்தி. இது எமக்கு நம்பிக்கையைத் தருகின்றது. ஆனால், எங்கள் ஆளும்தரப்பைப்பற்றிய சந்தேகங்கள் எமக்கு இப்போதும் இருப்பதால், நான் நினைப்பதை என்னால் வெளிப்படையாகக் கூறமுடியாது" என்று தெரிவித்தார்.

ஒரு தமிழ் துணை ஆயுதக்குழுத் தலைவரான கருணா என அறியப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனும் தடைசெய்யப்பட்டுள்ளார். 2008ஆம் ஆண்டு கடவுச்சீட்டு மோசடிக்காக பிரித்தானியாவில் இவர் சிறைப்படுத்தப்பட்டிருந்தார். போர்க்குற்றங்களுக்கான அவர் மீது விசாரணைகள் நடந்து கொண்டிருந்தபோதிலும், அந்தநேரத்தில் அவர் மீது எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து, இராணுவத்துடன் இணைந்துகொண்ட கருணாவின் படைகள், கட்டாய ஆட்சேர்ப்பு, சிறுவர் ஆட்சேர்ப்பு, கடத்தல், கொலைகள், சித்திரவதை மற்றும் மிரட்டல் ஆகியவற்றில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

''காலதாமதமானாலும் இறுதியில் நீதி கிடைக்கும் என்பதுடன் இப்போர்க்குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு ஆளாக்கப்படுவார்கள் - இவர்கள் இழைத்த கொடிய பாவங்களுக்கான தண்டனையிலிருந்து அவர்களால் தப்பமுடியாது என்ற வலுவான செய்தியினை போர்க்குற்றவாளிகளுக்கு இத்தடைகள் வழங்கும்'' எனச் சித்திரவதையிலிருந்து உயிர்தப்பிய தமிழர் ஒருவர் கூறினார்.

இத்தடைகள் 2020ஆம் ஆண்டிற்கான பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தடைகளுக்கான ஒழுங்குமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை. பட்டியலிடப்பட்ட தனிநபர்களுக்கு எதிராக நிதி, இயக்குனர் தகுதி நீக்கம் மற்றும் குடிவரவுத் தடைகள் விதிக்கப்படுகின்றன.

பிரித்தானியாவின் தடைப்பட்டியலில் கூறப்பட்டுள்ளதன் படி, நான்கு இலங்கையர்கள் மீதும் நிதி மற்றும் பயணத்தடைகள் விதிக்கப்படுகின்றன. இலக்கு வைக்கப்பட்ட சொத்து முடக்கங்கள் என்பதில் பண மற்றும் இதர சொத்துக்களை (சொத்து அல்லது வாகனங்கள்) முடக்குவது மற்றும் அவர்களுக்கு எந்த சொத்துக்களும் கிடைக்கமாட்டாது என்பதை உறுதிப்படுத்துவது என்பன உள்ளடங்கும். மேலும் தடை செய்யப்பட்ட நபர்கள் இங்கிலாந்தில் நுழையவோ அல்லது வசிக்கவோ முடியாது என்பதுடன் -இடைத்தங்கல் உட்பட, இங்கிலாந்துக்கு பயண விசா விண்ணப்பமும் மறுக்கப்படும். மேலும் நிதித் தடைகளை மீறுவது ஒரு குற்றவியல் குற்றமாகும்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், இப்போர்க்குற்றவாளிகளால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்கள். தஞ்சம் புகுந்துள்ள நாடுகளில் ஒன்றான பிரித்தானியாவினால் இவர்கள் பற்றிய உண்மை இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதையிட்டு நாம் மகிழ்வடைந்துள்ளோம். கடந்த ஒரு தசாப்தமாக இவர்களைப் பற்றிய ஆதாரங்களை நாம் தொகுத்து வந்துள்ளோம். ஆனால், இவர்களுக்கு எதிரான வாக்குமூலங்களை வழங்கிய பாதிக்கப்பட்டவர்களையும், பலவருடங்களாக அமைதியாகவும் தொடர்ச்சியாகவும் நீதிக்காப் போராடிவந்த தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த தனிபர்களையுமே இதற்குரிய பெருமை சென்றடைய வேண்டும் ஷ- என்றுள்ளது.

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச சபைத் தேர்தல் என்பது கிராம மட்டத்தில் உள்ள விடயங்களைக் கையாள்வதற்குரிய தேர்தலாகும். எனவே, மக்கள் கிராமத்தில் செல்வாக்குரியவர்களுக்கு வாக்களிப்பார்கள். எனவே, நிச்சயமாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணிக்கு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# இலக்கிய ஆய்வு மையம் அங்குரார்ப்பணம்

(ஸாகிர்)

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி சங்கத்தினால் ஏற்பாடு செய்து நடாத்திய வருடாந்த இப்தார் நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அரசமைப்பு பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பகுதிகளுக்கான அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா பிரதம அதிதியாகவும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி எம்.ஐ.எம். சபீனா விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது சாய்ந்தமருது பிரதேசத்தை மையப்படுத்தி, கரைவாகுப்பற்று இலக்கிய ஆய்வு மையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையமானது சுமார் 3 வருட காலமாக கலை இலக்கியத் துறை சார் மாணவர்களுக்கும், கலைஞர்களுக்கும் இப்பிரதேசத்திற்கும் பாரிய சேவையாற்றி வருகின்ற ஒரு முன்மாதிரியான நிறுவனமாக சாய்ந்தமருது பிரதேசத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருது பிரதேச கலாசார மத்திய நிலையம் இலக்கியவாதிகள் நவீன தொழில்நுட்பத்தின் தாக்கத்தால் இலக்கிய ஆளுமைகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை அதாவது தற்கால நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக இலக்கியவாதிகள் எதிர்நோக்கும் சவால்களை முறியடிப்பதற்கான ஒரு புரட்சிகரமான, முன்மாதிரியான செயற்பாடாக, இலங்கையின் முதன்முறையாக சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையமானது, கிழக்கை மையப்படுத்திய, கரைவாகுப்பற்று ஆழ்புல எல்லையை மையப்படுத்திய, 'கரைவாகுப்பற்று இலக்கிய ஆய்வு மையம்' ஒன்றை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் உருவாக்கி, அதனூடாக இலக்கியத்துறையில் சாதிக்கின்ற, இலக்கியத்துறை சார்ந்த இலக்கியவாதிகளை, இலக்கிய ஆளுமைகளை, எழுத்தாளர்களை, கவிஞர்களை, கதையாசிரியர்களை ஊக்கப்படுத்துகின்ற, கரைவாகுப்பற்று என்று அழைக்கின்ற ஒலுவில் கழியோடைப் பாலத்திற்கும் நீலாவணைப் பாலத்திற்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் உள்ள அனைத்து இன, மத இலக்கியத் துறையினருக்குமான ஒரு பிரதான மத்திய நிலையமாக, அதாவது 'கரைவாகுப்பற்று இலக்கிய ஆய்வு மத்திய நிலையமாக' இந்த கலாசார மத்திய நிலையத்தில் எதிர்காலத்தில் உருவாக்கி, அதனூடாக கலைஞர்களின், இலக்கியம் தொடர்பான இலக்கியவாதிகளின் ஆய்வு மையத்துக்குரிய அனைத்துப் பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்வதாகவும் இதனூடாக இலக்கியவாதிகளின் ஒன்றுகூடல்கள், ஆய்வுக்கலங்கள், அவர்களது கருத்தாடல்கள், புத்தக வெளியீடுகள், இலக்கிய ஆய்வு மாநாடுகள் போன்ற விடயங்களைச் செய்வதற்கான ஒரு முன்னேற்பாட்டைச் செய்திருப்பதாகவும் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் தனது தலைமையுரையின் போது சுட்டிக்காட்டினார்.

இந் நிகழ்வில், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ரம்ஸான், கல்முனை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரும் கலாசார மத்திய நிலையத்தின் ஆலோசகருமான, ஏ.சீ.எம். பழீல், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நளீர், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களான ஏஎச். சபீகா, ஏஎம். தௌபீக், பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏசீ.முஹம்மத், ஏ.சி. றியாஸ், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஐ. ஜாபிர், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஏ.எச்.ஏ பஷீர், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் எஸ். இம்தியாஸ் மற்றும் மத்திய நிலைய அபிவிருத்தி சங்க செயலாளர் அஸ்வான் மௌலானா, இறக்காமம் கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஏ.பி. நௌசாத், கல்முனை கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஜெனித்ரா தேவசந்திரன், உட்பட கலாசார மத்திய நிலைய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான ஓய்வுபெற்ற கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஸ்ரப், சிரேஷ்ட அண்ணாவியார், எம். ஐ. அலாவுதீன், கலாபூஷணம் ஏ. இஸ்ஸதீன், எம். மாஹிர், என்.எம். (மருதூர்) அலிக்கான், கலாபூஷணம் சுபுஹான், மற்றும் மத்திய நிலையத்தின் ஊடக ஒருங்கிணைப்பாளர் பல்துறைக் கலைஞருமான எம்.எஸ்.எம்.ஸாகிர், கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் மத்திய நிலைய வளவாளர்களான எம்.ஐ.எம். அமீர், எம்.எம்.எம். தாதீஸ், மத்திய நிலைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், முக்கிய அம்சமாக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா, அவர்களுக்கு மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் உட்பட கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி குழுவினரால் அதிதிகள் புடை சூழ, பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் மௌலவி ஏஎம். தௌபீக் (நளீமி) இப்தார் பற்றிய விசேட சொற்பொழிவை நிகழ்த்தினார்.

## தேர்தல் செயற்பாடுகள், முறைப்பாடுகள் குறித்து வடக்கு பொலிஸார் கலந்தாய்வு

தேர்தல் முறைப்பாடுகள் விடயத்தில் பொலிஸாரின் முகாமைத்துவம், தேர்தல் கடமைகளின்போது அவர்களின் வகிபாகம் தொடர்பாக வட மாகாணத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் திங்கட்கிழமை கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்த கலந்துரையாடல் கிளிநொச்சியில் உள்ள தனியார் விடுதியொன்றில் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதில் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய இணைய வழி செயலி ஊடாக இணைந்துகொண்டார்.

இதன்போது தேர்தல் விடயங்கள், கடமைகள், பாதுகாப்புத் துறையினரின் செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம், விசாரணை மற்றும் திட்டங்கள்) பி.பீ.சி.குலரத்ன, கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், பொலிஸ் திணைக்களத்தின் சட்ட பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர, யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், வட மாகாணத்தின் அனைத்து பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், தேர்தலுடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.



## மனித பாவனைக்குத் தீங்கு விளைவிக்கும் குளிர்பானம் சம்மாந்துறையில் சிக்கியது

### 20 ஆயிரம் ரூபா தண்டம் அறவீடு

(தில்சாத் பர்வீஸ்)



சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய எல்லைக்குட்பட்ட சம்மாந்துறை 01 பகுதியில் மனித பாவனைக்கு தீங்கு விளைவிக்கும் குளிர்பானங்கள் இருப்பதாகத் தகவல் கிடைக்கப்பெற்றது.

குறித்த தகவலுக்கு அமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத்தின் ஆலோசனையின் பேரில் சம்மாந்துறை 01 பகுதிக்கு பொறுப் பான பொதுச் சுகாதார பரிசோதகர் டி. தினேஸினால் குறித்த குளிர்பானம் கைப்பற்றப்பட்டு அரச பகுப்பாய்வு திணைக்களத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

அரச பகுப்பாய்வு திணைக்களத்தால் குளிர்பானம் தொடர்பான அறிக்கையில் அனுமதிக்கப்படாத நிறமூட்டியினையும், அனுமதிக்கப்படாத பாதுகாக்கும் இரசாயனத்தையும் கொண்டிருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து, சம்மாந்துறை நீதிவான் முன்னிலையில் குளிர்பானத்தை விற்பனை செய்த கடை உரிமையாளருக்கும் அதனை உற்பத்தி செய்தவரையும் ஆஜர்ப்படுத்திய போது இருவருக்கும் எதிராக ரூபா 20 ஆயிரம் தண்டப்பணம் அறவிடப்பட்டதுமின்றி எச்சரிக்கையையும் செய்யப்பட்டது.

இச்சோதனை நடவடிக்கையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.என்.எம். பைலான் தலைமையிலான குழுவினர் இச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஆளும்தரப்பின் பதில் என்ன?

**இலங்கை இராணுவத் முன்னாள் தளபதிகள், முன்னாள் கடற்படைத் தளபதி மற்றும் சர்ச்சைக்குரிய நபரான ஒட்டுக்குழுத் தலைவர் கருணா ஆகியோர் மீது பிரிட்டிஷ் அரசு சமீபத்தில் விதித்த தடைகள், போர்க்கால அட்டூழியங்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் நீதி பற்றிய உரையாடல்களை மீண்டும் தூண்டிவிட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகள் கடந்த 15 வருடங்களாக இருந்தபோதும் இலங்கை அரசு இது விடயத்தில் காது கேளாதது போன்று அமைதி காத்தே வருகின்றது.**

**இப்போது பிரிட்டனின் தடை குறித்தும் ஆளும்தரப்பு அமைதி காக்கின்றது. தடை அறிவிப்பு வெளியாகி 48 மணி நேரமாகிவிட்டபோதும் இது விடயத்தில் ஆளும்தரப்பு எந்தவிதப் பிரதிபலிப்புக்களையும் காட்டவில்லை. தமிழர் தரப்பில் இந்தத் தடைகளுக்கு தமிழ் அரசுக் கட்சி உடனடியாகவே வரவேற்புத் தெரிவித்துள்ளது. மனித உரிமைகள் செயற்பர்டாளரான யஸ்மின் சூக்கா தலைமையிலான நீதி மற்றும் உண்மைக்கான திட்டமும் இந்தத் தடைகளை வரவேற்று அறிக்கை விடுத்துள்ளது. ஆனால் எதிர்பார்க்கப்பட்டது போலவே கடற்படையின் முன்னாள் அதிகாரியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர, பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச போன்றவர்கள் இந்தத் தடையைக் கண்டித்துள்ளனர். குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவரிகளுக்கு நெருக்கமானவர்களும், அவர்களின் கூட்டாளிகளுமான இவர்கள் கண்டிப்பது புதியதல்ல. ஆனால், இது விடயத்தில் மாற்றத்தை வாக்களித்து பதவிக்கு வந்த இலங்கை ஆளும்தரப்பின் கருத்தே முக்கியமானது.**

**பல தசாப்தங்களாக, இலங்கையின் உள்நாட்டுப் போர் ஆழமான மற்றும் நீடித்த வடுக்களை ஏற்படுத்தியுள்ளது, குறிப்பாக தமிழ் சமூகம், மோதலின் இறுதிக் கட்டங்களில் செய்யப்பட்ட போர்க்குற்றங்களுக்காக நீதி கோரி வருகிறது. சர்வதேச சமூகம் குற்றவாளிகளை பொறுப்புக்கூற வைக்க நடவடிக்கை எடுத்துள்ள மிகக் குறைந்தபட்ட நடவடிக்கைகளைக்கூட, இலங்கை ஆளும்தரப்பு இதுவரையில் நிராகரித்தே வந்துள்ளது. பெரும்பாலும் இதுபோன்ற தடைகள், ஐ.நா. தீர்மானம் ஆகியவற்றை, தனது சொந்தப் பிரச்சனைக்குரிய கடந்த காலத்தை எதிர்கொள்ளும் வாய்ப்பாகக் கருதுவதற்குப் பதிலாக தேவையற்ற தலையீடாகக் கருதியுள்ளது.**

**பிரிட்டிஷ் தடைகள் பற்றிய அறிக்கைகள் போர்க் குற்றங்களின் நம்பகத்தன்மை குறித்த மற்றொரு ஆதாரமாக மாறியுள்ளது. ஏற்கனவே இதே குற்றங்களுக்காக அமெரிக்காவும் கனடாவும் தடைகளை விதித்துள்ளனன. பிரிட்டன் அறிவித்துள்ள தடையில் குறிப்பிட்டப்பட்டுள்ள நால்வருக்கு மேலதிகமாக மேலும் நால்வரின் பெயர்களும் அந்த இரு நாடுகளின் தடைகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தத் தடைகள் அனைத்துமே போர்க் குற்றங்களின் நம்பகத்தன்மைக்கான சான்றுகளாக அமைகின்றன. எனவெ இலங்கை ஆளும்தரப்பு இது தொடர்பில் தனது குடிமக்களுக்கு, குறிப்பாக போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தெளிவான மற்றும் வெளிப்படையான நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. இந்தப் பிரச்சினையைத் தவிர்ப்பது, அரசு தனது படைகளால் செய்யப்பட்ட கடுமையான மீறல்களைக் கணக்கிட விரும்பவில்லை என்ற கருத்தையே ஆழமாக்குகிறது. இந்த மௌனம் தமிழ் சமூகத்தை மேலும் அந்நியப்படுத்துகிறது, அவர்களின் துன்பங்கள் முறையாக ஓரங்கட்டப்பட்டு, தொடர்ந்து அவநம்பிக்கையையும் வெறுப்பையும் வளர்க்கிறது.**

**நீதி இல்லாமல் உண்மையான நல்லிணக்கத்தை அடைய முடியாது. பொறுப்புக்கூறல் என்பது பழிவாங்கும் கருவி அல்ல, மாறாக ஒரு நீதியான மற்றும் ஜனநாயக சமூகத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் ஒரு அடிப்படைக் கொள்கையாகும். குற்றம் சாட்டப்பட்ட நபர்களைப் பாதுகாப்பதன் மூலமோ அல்லது சர்வதேச அழுத்தத்தை நிராகரிப்பதன் மூலமோ போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளைப் புறக்கணிப்பதன் மூலமோ ஆளும்தரப்புக்கள் தமது பொறுப்பிலிருந்து தப்பிவிட முடியாது. சட்டத்தின் ஆட்சியைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கும் கலாசாரத்தையே அது ஊக்குவிக்கும். அத்தகைய கலாசாரத்தின் விளைவான பாதாள உலகக் குழுக்களின் மோசமான பாதிப்பை இலங்கை தற்போது எதிர்கொண்டு வருகின்றது என்பது கண்கூடு. அது மட்டுமன்றி பொறுப்புக்கூறலில் இருந்து இலங்கை ஆளும்தரப்புக்கள் தொடர்ந்தும் விலகி நிற்பது நீடித்த அமைதியை நோக்கிய பாதையைத் தடுக்கிறது.**

**எனவே இலங்கை ஆளும்தரப்பு இது விடயத்தில் தனது நிலைப்பாட்டை வெளிப்படையாகத் தெரிவிப்பது மிகவும் முக்கியம். தடைகள் தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை என்று அது நம்பினால், அதனை நிரூபிக்கவேண்டும். குற்றச்சாட்டுகளின் சட்டபூர்வமான தன்மையை அது ஒப்புக்கொண்டால், அது உண்மையான பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கு உறுதியளிக்க வேண்டும். அத்தகைய உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் ஒன்று பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதால், சுயாதீனமான குறைந்தபட்சம் சர்வதேசப் பார்வையாளர்கள், தலையீட்டாளர்களைக் கொண்ட விசாரணைக்குழுக்களை நிறுவுவதற்கு அது ஒத்துழைக்கவேண்டும்.**

**பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து நீதிக்கான கோரிக்கைகளை சர்வதேச சமூகம் தொடர்ந்து ஆதரிக்கவேண்டியதன் அவசியத்தையே பிரிட்டனின் தடை வெளிப்படுத்துகின்றது. மோதலின் சுமையைத் தொடர்ந்து சுமக்கும் தமிழ் மக்களின் குரல்கள் மௌனமாக்கப்படக்கூடாது. நீதிக்கான அவர்களின் கோரிக்கை நல்லிணக்கத்திற்கு ஒரு தடையல்ல. அது அதன் அடித்தளம். பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை மூலம் மட்டுமே இலங்கை தனது கடந்த கால காயங்களை குணப்படுத்தி, நம்பிக்கை, ஒற்றுமை மற்றும் உண்மையான சமத்துவத்தால் வரையறுக்கப்பட்ட எதிர்காலத்தை நோக்கி நகர முடியும்.**

# சட்டவிரோத தையிட்டி விகாரையும் புதிய மடாலயமும் தமிழின அழிப்புத் தொடர்வதற்கான அடையாளங்களே

## அருட்தந்தை சத்திவேல் காட்டம்

*இன அழிப்பை தொடர்வார்கள் என்பதற்கான அடையாளங்களாகவே சட்ட விரோத தையிட்டி விகாரையும் புதிய மடாலயமும் அமைந்துள்ளன என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.*



*அவரால் நேற்று (செவ்வாய்க் கிழமை) வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.*

*அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-*

*இராணுவத்தினரால் தையிட்டியில் பலவந்தமாக கட்டப்பட்டுள்ள விகாரை சட்டத்துக்கு விரோதமானது. அதனால் தமது சொந்த நிலங்களை இழந்துள்ள மக்களும் ஒட்டுமொத்த தமிழர்களும் ஓங்கி குரல் எழுப்பிக்கொண்டிருக்கையில் விகாரைக்கு அண்மையில் மீண்டும் சட்ட விரோதமாக பிக்குகள் தங்கும் மடாலயம் ஒன்று கட்டப்பட்டு யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தனபாலினால் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டுள்ளமை தமிழர்கள் மத்தியில் பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.*

*விகாரை விடயம் மீண்டும் தமிழர்களின் நீதிக் குரலை இராணுவத்தின் சப்பாத்துக்காலால் மிதித்து சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கொடுங்கரங்களால் தேசிய மக்கள் சக்தியும் அடக்கும் என்பதை நிரூபித்துள்ளதோடு இது தமிழர்களை மீண்டும் போராட்ட வன்முறைக்குதூண்டி பயங்கரவாதிகளாக்கும் அரச பயங்கரவாதத்தின் வன்முறையை கண்டிப்பதோடு அண்மித்து வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழர்கள் இதற்கு தகுந்த பதிலடியை கொடுக்கவேண்டும்.*

*தேசிய மக்கள் சக்தியினதும், மக்கள் விடுதலை முன்னணியினதும் தலைவரான தற்போதைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்கள் வடக்குக்கு தேர்தல் காலங்களில் வந்தபோது மக்கள் பெரும் ஆரவாரத்தோடும் மேளதாளங்களுடனும் வரவேற்று பொன்னாடை போர்த்தி, மலர் மாலை அணிவித்து, ஆரத்தி எடுத்து வரவேற்றதோடு வாக்குகளையும் அள்ளிக் கொடுத்தனர்.*

*அத்தகைய மக்களை சிங்கள பௌத்த பேரினவாத ஆயுதத்தால் முதுகில் குத்திக் கிழித்து காயப்படுத்தியுள்ளமை ஆட்சியாளர்களின் இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் எதிரான போலி முகத்திரையை கிழித்து தமிழர்களுக்கு எதிரான அவர்களின் அடுத்த கட்ட யுத்த முகம் வெளிப்பட்டுள்ளது எனலாம்.*

*அது மட்டுமல்ல கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் அவர்களுக்கு பின்னால் அணி திரண்டு வாக்களித்தவர்களும் அவர்களுக்காக தம்மை அரசியல் மற்றும் கல்வி புத்தி ஜீவிகளாக அடையாளம் காட்டிக்கொண்டவர்கள் மட்டுமல்ல. தற்போது தேசிய மக்கள் சக்தியின் கீழ் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட துடித்துக் கொண்டிருப்பவர்களையும் தலை கவிழ வைத்துள்ளது தற்போதைய தையிட்டி விகாரையின் நிலை.*

*தேசிய மக்கள் சக்தி சார்பில் வடக்கு, கிழக்கில் நாடாளுமன்றத்துக்கு தெரிவானவர்களும், வடக்கு மாவட்ட சபையின் தலைவர் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் அவர்களும் தையிட்டி விகாரை விடயமாகவும் மற்றும் நிலமிழந்தோர் சம்பந்தமாகவும் நீதி நிலைநாட்டப்படும் என வாய் கிழிய கத்தினார்கள். இனி அவர்கள் எந்த முகத்தோடு மக்கள் முன் தோன்றுவார்கள்? அமைச்சர் எவ்வாறு மாவட்ட அபிவிருத்தி சபையில் தலைமை பதவியில் தொடர்ந்து இருப்பார்?*

*தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளரும் அபிவிருத்தி சபை தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரன் அவர்களின் அனுமதி மற்றும் ஆசீர்வாதத்தோடுமே இரண்டாவது சட்டவிரோத கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது எனலாம். யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் பங்கேற்பு அரசின் பங்கேற்பையும் ஆசீர்வாதத்தையும் உறுதிப்படுத்துகின்றது.*

*தேசிய மக்கள் சக்தி முகம் கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் கட்டமைப்பும் அடிப்படையில் பேரினவாத சிங்கள பௌத்த கட்டமைப்பே. இதனைத் தொடர்ந்து பாதுகாத்துக்கொண்டே இவர்கள் அரசியல் செய்ய நினைப்பது நாட்டை மேலும் பேரழிவுக்கே இட்டுச் செல்லும்.*

*தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வடக்கு, கிழக்கில் படைத்துறை கட்டமைப்பை அகற்றவோ மாற்றி அமைக்கப்போவதோ இல்லை. இதற்குத்துணையாகவும் சமமாகவும் சிங்கள பௌத்த கட்டமைப்புகளை மேலும் பலப்படுத்தி இன அழிப்பை தொடர்வார்கள் என்பதற்கான அடையாளமாகவே சட்ட விரோத தையிட்டி விகாரையும் புதிய மடாலயமும் அமைந்துள்ளன.*

*பேரினவாத பிக்கு ஒருவர் மடாலய ஆலய திறப்பினை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் 'மடாலய திறப்பு நாளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மடாலய வளாகத்தில் இருந்து பாதுகாப்பு படையினரை மீளப்பட்டுள்ளது. இவ்விகாரை மற்றும் மடாலயத்தின் பாதுகாப்பு சிங்கள பௌத்தர்களின் கையிலே தங்கியுள்ளது. அதன் விளைவுகளை ஆட்சியாளர்கள் பொறுப்பேற்க வேண்டும்' எனும் தொனியில் பேசியிருப்பது மதவாத வன்முறைக்கு தொடர்ந்தும் சிங்கள பௌத்தர்களை அணி திரட்டுவதாகவே உள்ளது.*

*இதனை கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் ஆட்சியாளரும் இல்லை. ஏனெனில், அதற்கு பின்னால் நின்று இவர்களும் ஆட்சி செய்கின்றார்கள். தொடர்ந்தும் ஆட்சி செய்ய விரும்புகின்றார்கள்.*

*இந்நிலையில் தேசிய மக்கள் கட்சி சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியவர்களும், இவர்களுக்கு தலைமை தாங்கி வழி நடத்துபவர்களும் சட்டவிரோத விகாரை மற்றும் புதிதாக கட்டப்பட்டுள்ள மடாலயம்*

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

## சட்டவிரோத ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

விடயத்தில் மக்களின் மன நிலையில் நின்று தமது கருத்தை வெளிப்படுத்தி அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

அதற்கு வடக்கு, கிழக்கு தமிழர்கள் விரும்பும் சாதகமான பதில் கிடைக்காதவிடத்து உள்ளூராட்சி மன்ற தேர்தல் போட்டியில் இருந்து விலகவும் முடிவெடுக்க வேண்டும். தொடர்ந்து வடக்கு, கிழக்கினை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக்கொண்டு நாடாளுமன்றில் அடுத்த கட்ட நகர்வை அவசரமாக முன்னெடுக்கவும் வேண்டும்.

தமக்கான சாதகமான தெளிவான அவசரமான பதில் அரசாங்கத்திலிருந்து கிடைக்கவில்லையேல் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் தமது ஆதரவை எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் விலக்கிக்கொள்வதோடு தாம் விரும்பும் தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் மாற்றுக் கட்சிக்கு அளித்து தமிழர்களின் எதிர்கால அரசியலை பலப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றோம்.

தற்போதும் பேரினவாத சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பிலேயே நம்பிக்கை வைத்து அதனையே தொடரும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிட்டப் போவதில்லை என்பதை கருத்தில் கொண்டு வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் தமிழர் தேசம், தேசியம் என்பதை அடிப்படையாகக் கொண்டு இணைந்து உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றி தமிழர்களின் அரசியல் இருப்பை உறுதி செய்து மக்களின் நம்பிக்கையை தக்கவைக்க வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

தமிழ் கட்சிகள் பலமாக ஒன்றிணையக் கூடாது என்பதே பேரினவாத கட்சிகளினதும் அக்கட்சிகளோடு ஒட்டி அரசியல் செய்யும் தமிழ் ஒட்டுண்ணி மற்றும் புல்லுருவி அரசியல்வாதிகளினதும் நிலைப்பாடாகும். இது தோற்கடிக்கப்பட வேண்டும்.

எனவே சட்ட விரோத தையிட்டி மற்றும் மடாலயம் தொடர்பில் இதுவரை கொண்டிருக்கும் பிரிவினைவாத, கட்சி மைய அசமந்த அரசியல் நிலைப்பாட்டை தவிர்த்து தொடர்ச்சியாக போராட்டத்தை முன்னெடுக்க அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் கூட்டு சேர்வதோடு சமய அமைப்புகளும் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் கருதி தமது முழுமையான ஆதரவை வெளிப்படையாக தெரிவிக்க முன்வருமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம். - என்றார்.

# அம்பாறை மாவட்ட செயலக வருடாந்த இப்தார் நிகழ்வு

(சர்ஜூன் லாபீர்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் மாவட்ட செயலக முன்றிலில் திங்கட்கிழமை நடைபெற்றது.

சமூக நல்லிணக்க இப்தாராக இடம்பெற்ற இந்நிகழ்வில் நோன்பின் மாண்புகளை பற்றி மௌலவி சஹ்றான் ஹஸன்(அன்வாரி) மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் திகவாபி விகாராதிபதி பேதி வேல சந்தானந்த நாயக்க, கல்முனை சிவஸ்ரீ க.வி பிரமின் குருக்கள், அம்பாறை மேதடிஸ் ஆலய அருட் தந்தை ரோகான் அப்பு காமி உட்பட மத போதகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



மேலும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன், அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஏ முனாசீர், பிரதம கணக்காளர் ஏ.எம்.எம் மஹ்ரூப், பிரதம பொறியியலாளர் ஏ.பி.எம் சாஹீர், மாவட்ட கணக்காளர் ஐ.எம் பாரீஸ், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி அனீஸ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள்,கணக்காளர்கள், பிரதி, உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், வர்த்தக சங்க மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வுமாவட்ட செயலக முஸ்லிம் மஜ்லிஸின் நெறிப்படுத்தலிலும் ஒழுங்குபடுத்தலிலும் சிறப்பாக நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.





# ஒரு வயது 8 மாதங்கள் நிரம்பிய ஆண் குழந்தை வீட்டின் முன்பாக வாய்க்காலில் சடலமாக மீட்பு

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிராஜ் நகர் 08 ஆம் வாய்க்கால் பகுதியில் குழந்தையொன்று வீட்டுக்கு முன்னால் உள்ள வாய்க்காலில் விழுந்து உயிரிழந்துள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த குழந்தை மிஹ்ரான் இசான் வயது (ஒரு வயது எட்டுமாதமும் நிறைந்த ) எனத் தெரியவருகிறது. வீட்டுக்கு முன்னால் உள்ள வாய்க்காலில் விழுந்துள்ள குழந்தையை தேடிய போது சுமார் 100 மீற்றர் தூரத்தில் நீரால் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் ஜனாசாவாக மீட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரனை மூலம் தெரியவருகிறது.

மேற்படி உயிரிழந்த குழந்தையின் ஜனாசா கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பிரேத பரிசோதனையின் பின் உறவினர் களிடம் குறித்த ஜனாசா ஒப்படைக் கபடவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பில் 2 முறைப்பாடுகள்

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இரு வெவ்வேறு பொலிஸ் நிலையங்களுக்கு திங்கட்கிழமை இரண்டு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பிலேயே முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவரின் பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் சமூக ஊடகங்களில் காணொளிகளை பதிவிட்டுள்ளதாக பொலன்னறுவை - சிறிபுர பொலிஸ் நிலையத்திற்கு திங்கட்கிழமை முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

மேலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவருக்கு சார்பாக பெரிய கட்டவுட் ஒன்று வைக்கப்பட்டுள்ளதாக மாத்தளை-மஹவெல பொலிஸ் நிலையத்திற்கு திங்கட்கிழமை முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# கிளிநொச்சியில் சூட்சுமமாக இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை



கிளிநொச்சி - இரத்தினபுரம் பகுதியில் சூட்சுமமான முறையில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் திங்கட்கிழமை முற்றுகையிடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 20 வயதுடைய இளைஞனை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து 380 லீற்றர் கோடா, 20 லீற்றர் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பொருள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பூநகரி பிரதேச சபையில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியது ஈ.பி.டி.பி.



கிளிநொச்சி பூநகரி பிரதேச சபையில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி செலுத்தியது கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா குறித்த கட்டுப்பணத்தை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் செலுத்தினார்.

பூநகரி, மன்னார் மற்றும் தெஹியத்த கண்டி ஆகிய பிரதேச சபைகளுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை எதிர்வரும் 26 ஆம் திகதி நண்பகலுடன் நிறைவடைகிறது. 316

# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி பூநகரிக்கு வேட்புமனுத் தாக்கல்

ஜனநாயக தமிழ்த்தேசி கூட்டணி பூநகரி பிரதேச சபைக்கான வேட்பு மனுவை இன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் செலுத்தியது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் வேட்பு மனுவை தாக்கல் செய்தனர். 113



# சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு விவசாயிகள் பொங்கல் நிகழ்வு

(ஹஸ்பர்)

சர்வதேச நீர் தினமான மார்ச் 22 ஐ முன்னிட்டு தம்பலகாமம் விவசாய சம்மேளனங்கள் இணைந்து சிறப்பு பொங்கல் விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்வானது திங்கட்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள வெம்பு நாகம்மாள் கோயிலில் இடம் பெற்றது. இதன் போது விசேட பூஜைகள் இடம் பெற்று குறித்த பொங்கல் விழா இடம் பெற்றிருந்தது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி, தம்பலகாமம் கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், கந்தளாய் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.







# 'சிவாகம கலாநிதி' தானு மஹாதேவ குருக்களின் மறைவுக்கு இந்துக் குருமார் அமைப்பு அனுதாபம்

'சிவாகம கலாநிதி' தானு மஹாதேவ குருக்களின் ஆத்ம சிவப்பிராப்திக்கு இறை பிரார்த்தனை செய்வதாக இந்துக் குருமார் அமைப்பு தெரிவித்துள்ளது.


இது தொடர்பாக இந்துக் குருமார் அமைப்பு மேலும் தெரிவிக்கையில் -

எமது விப்ரசிரேஷ்டராக, அந்தணர்களின் உயர்வுக்கு குருகுல கல்வி முதல் பல்வேறு வழிகளில் பங்காற்றிய பெருந்தகை சிவபதமடைந்தார் என அறிந்து மிகவும் கவலை அடைந்தோம்.

பல்மொழி ஆளுமை மிக்கவராக, அன்புடன் அனைவரையும் அரவணைக்கும் பண்பாளராக திகழ்ந்தவர். யார் எந்த உதவி கேட்டாலும் உடனே தயங்காமல் வழிவகுப்பார். ஓர் ஆசான் எப்படி வாழ வேண்டும் என முன்னுதாரணமாக வாழ்ந்தவர்.

இந்தியாவில் உள்ள ஆதீனங்கள், குருகுல அதிபர்கள் உள்ளிட்ட பெரியோரது அன்புக்கும் மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரியவராக திகழ்ந்தவர்.

அண்மையில் தருமை ஆதீன 27 ஆவது நட்சத்திர குருமணிகள் நட்சத்திர குருமணிகளால் 'சிவாகம கலாநிதி' எனும் சிறப்புடன் கௌரவம் வழங்கப்பட பெருந்தகை. இக்கௌரவத்தை இந்திய துணை தூதுவர், குருக்கள் அவர்களின் இல்லம்



தேடி சென்று வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

யாவரும் இறை நியதியை ஏற்க வேண்டிய சூழ்நிலை.

அமரரது ஆத்ம சிவப்பிராப்திக்கு அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்கிறோம். அத்துடன் உறவுகளுக்கு எமது ஆறுதலை இந்துக் குருமார் அமைப்பு சார்பில் பகிர்ந்துகொள்கிறோம் என்று தெரிவித்துள்ளது.

# கோண்டாவிலில் 3 உணவகங்களிற்கு ரூ. ஒரு லட்சத்து 56 ஆயிரம் தண்டம்

## ஓர் உணவகத்திற்குச் சீல் வைப்பு

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் நிர்மலானந்தனின் ஆலோசனையிலும் வழிகாட்டலிலும், பூட்சிற்றிகள், உணவகங்கள், ஹோட்டல்கள் என்பன தொடர்ச்சியாக பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கோண்டாவில் பொது சுகாதார பரிசோதகர் க. ஜெகானந்தன் தலைமையிலான குழுவினரால் கடந்த புதன்கிழமை ஹோட்டல்கள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது சுகாதாரசீர்கேட்டுடன் இயங்கிய மூன்று உணவகங்கள் இனங்காணப்பட்டன.

ஏற்கனவே பல தடவைகள் பொது சுகாதார பரிசோதகரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் அசண்டையீனமாக, சுகாதார சீர்கேட்டுடன் இயங்குகின்றமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் திகதி காலாவதியான பொருள்களும் உணவகம் ஒன்றிலிருந்து கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து சுகாதார பரிசோதகர் க. ஜெகானந்தனால் நேற்று (செவ்வாய்க்கிழமை) வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை நேற்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம் உணவக உரிமையாளர்களிற்கு முறையே 90 ஆயிரம் ரூபா, 36 ஆயிரம் ரூபா, 30 ஆயிரம் ரூபா என மொத்தம் ஒரு லட்சத்து 56 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஓர் உணவகத்தை சீல் வைத்து மூடுமாறு மேலதிக நீதிவான் செ. லெனின்குமார் உத்தரவிட்டார்.



இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகர் க. ஜெகானந்தனால் குறித்த உணவகம் சீல் வைத்து மூடப்பட்டது.



காலைக்கதிர் Kalaikkathir

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வாக்களித்து அமோக வெற்றியடையச் செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

யாழ். மாவட்டத்தில் எமது வேட்புமனுக்கள் 9 சபைகளில் நிராகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வோம் - என்றார்.

## காங்கேசன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மாளிகையை முறையான அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான திட்ட முன்மொழிவை சமர்ப்பிக்குமாறு இன்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் யாழ். மாவட்டச் செயலரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு சிக்க வேண்டாம் என்று தமிழ் மக்களிடம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் இராணுவ தளபதிகளான சவேந்திர சில்வா, ஜகத் ஜயசூரிய, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட மற்றும் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் தளபதி கருணா ஆகியோர் மீது பிரிட்டன் விதித்துள்ள தடையை வன்மையாக கண்டிப்பதாக குறிப்பிட்டு தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

''பயங்கரவாதத்தை முழுமையாக தோற்கடித்த முதலாவது தேசியமாக இலங்கை காணப்படுகிறது. மேற்குலக பயங்கரவாதத்துக்கு ஆதரவான அதிகாரிகள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நிதியுதவி வழங்கியமை ஒன்றும் இரகசியமல்ல. அவர்கள் பயங்கரவாதத்தை நியாயப்படுத்தி, சமாதானத்தை உறுதிப்படுத்திய எமது இராணுவத்தினரை பழிவாங்குவதற்கு நடைமுறையிலும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

இலங்கை இராணுவத்தின் முன்னாள் உயர் அதிகாரிகளுக்கு பிரித்தானியா விதித்துள்ள தடையை முழுமையாக நிராகரிக்கிறோம். மனித உரிமைகளைப் பாதுகாத்து ஒற்றையாட்சி நாட்டில் அனைவரும் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு தமது வாழ்க்கையையும் சவாலுக்குட்படுத்திய இராணுவத்தின் உயர் அதிகாரிகளுக்கு மாத்திரமே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. விடுதலை புலிகள் அமைப்புக்கு எதிராக எவ்வித தடைகளும் விதிக்கப்படவில்லை.

பயங்கரவாதத்துக்காகச் செயற்படும் பல்வேறு குழுக்களின் அழுத்தங்களின் பிரதிபலனாகவே இது காணப்படுகிறது. இது நியாயமற்றது. அனைவரும் இன்று அனுபவிக்கும் சுதந்திரம் கடுமையான மற்றும் நேரடியான நிலையில் எடுத்த தீர்மானங்களின் பெறுபேறாகும் என்பதை வடக்கு மற்றும் தெற்கு மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

பிரித்தானியாவால் விதிக்கப்பட்டுள்ள இந்த தடை ஒட்டுமொத்த இராணுவத்தின் உளவியல் தைரியத்தை பாதிப்பதாக அமையும். அத்துடன் ஒற்றையாட்சி நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு விடுக்கப்படும் நேரடியான தாக்குதலாகும் இது. இந்தத் தடையின் பின்னணியில் இருக்கும் நபர்கள் இந்த நாட்டில் பிரச்சினைகளை ஏற்படுத்தவும் நல்லிணக்கத்தை அச்சுறுத்தலுக்குள்ளாக்கவும் முயற்சிக்கிறார்களே தவிர இந்நாட்டில் வாழும் தமிழர்கள் உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கம் அவர்களுக்கு கிடையாது.

இந்த நாட்டில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் காணப்பட்டதே தவிர அது எந்தவொரு இனகுழுவுக்கும் எதிரானதல்ல என்பதை நான் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டுக்கொள்கிறேன். ஒரு சில அரச சார்பற்ற அமைப்புக்கள் எமது சமூகத்தின் மத்தியில் பிளவை ஏற்படுத்துவதற்கு கோடி கணக்கில் நிதி செலவழித்துள்ளதாக அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

சிறப்புச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல்களுக்குள் சிக்கவேண்டாம் என்று தமிழ் மக்களிடம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். இராணுவத்தின் தியாகத்தை மலினப்படுத்தியவர்களின் ஒத்துழைப்புடன்தான் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் ஆகியோர் ஆட்சிக்கு வந்தனர்.

இலங்கை தாய்நாட்டின் அமைதியை பாதுகாத்தவர்களை வெளிநாட்டு சக்திகள் தாக்கும்போது முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகளை ஆளும்தரப்புப் பாதுகாக்குமா அல்லது அமைதிகாப்பீர்களா என்ற கேள்வியை முன்வைக்கிறேன்.

எமது இராச்சியத்தை பாதுகாத்த இராணுவத்தினரை எந்த நிலையிலும் பாதுகாக்க வேண்டும். இதுவே எமது நிலையான நிலைப்பாடு. இராணுவத்தினரின் தியாகத்தினால்தான் இந்த நாட்டின் அமைதி பாதுகாக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் உரிமைகளை இல்லாதொழிக்க ஒருபோதும் இடமளிக்கமுடியாது" - என்றார்.

## போதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைப்பொருளை அதீதளவில் நுகர்ந்த நிலையில் , உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள அதேவேளை , உயிரிழந்த இளைஞனுடன் இணைந்து போதைப்பொருளை நுகர்ந்த ஏனையவர்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அரசியல் கைதிகள் விடுதலை குறித்து வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தேசிய மக்கள் சக்தி தோழர்கள் பொய்யான வாக்குறுதிகளுடன் மீண்டும் தேர்தலிற்காக களத்தில் குதித்துள்ளனர் என தெரிவித்துள்ளார்

மகசின் சிறைச்சாலைக்கு சென்று தமிழ் அரசியல் கைதிகள் சிலரைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் வந்து ஆறு மாதங்களிற்கு மேல் ஆகிவிட்டது. இந்த ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அவர்கள் தேர்தல் அறிக்கையின் ஊடாக மக்களிற்கு சில உறுதிமொழிகளை வழங்கியிருந்தார்கள். அதில் நாங்கள் தொடர்ச்சியாக வேலை செய்துகொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலையும் மிகவும் முக்கியமானது ஒன்று.

இந்த அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நாங்கள் தொடர்ச்சியாகப் போராடிக்கொண்டிருக்கின்றோம். இந்த நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அரசியல் கைதிகள் பல்வேறு ஆண்டுகளாக சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றனர். இன்று 30 ஆண்டுகளிற்கு மேல் இந்த சிறைச்சாலைக்குள் பல அரசியல் கைதிகள் உள்ளனர்.

நான் அவர்களில் ஒரு சிலரை பார்ப்பதற்காக இங்கு வந்தேன். கிட்டத்தட்ட 19 வயதில் கைதுசெய்யப்பட்ட சிவகுமார், பார்த்தீபன் என்ற இருவர் முப்பது வருடங்கள் கடந்தும் இன்று 50 வயதாகிய நிலையிலும் விடுதலையடைய முடியாமல் சிறையில் வாடுகின்றனர்.

இவர்களின் விடுதலை தொடர்பாக அமைச்சர் விஜித ஹேரத்திடம் ஒக்டோபர் மாதம் வலியுறுத்தியிருந்தேன். அதற்குப் பதிலளித்த அவர் விடுதலைக்கான வேலைகள் இடம்பெறும் எனத் தெரிவித்திருந்தார். அதற்கு பின்னர் பிரதியமைச்சர் ஒருவரின் ஊடாக ஹர்ச நாணயக்காரவிற்கு இது தொடர்பாக எடுத்துக்கூறியிருந்தேன். அதற்குரிய பதில் எனக்குக் கிடைக்கவில்லை.

அதன் பின்னர் பிரதமர் ஹரிணிக்கும் பல்வேறு தகவல்களை அனுப்பியிருந்தேன். எத்தனையோ செய்தியாளர்கள் சந்திப்புகள் ஊடாக அரசியல் கைதிகளின் கஷ்டங்கள். ஏற்கனவே வழங்கப்பட்ட வாக்குறுதிகள், அதற்காக மக்கள் வழங்கிய ஆணை, அவர்களின் விடுதலையின் அவசியம் குறித்தெல்லாம் ஆளும்தரப்புக்குத் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றோம். ஆனால் இன்றுவரை அரசியல் கைதிகளை விடுவிக்க எந்த நடவடிக்கையும் எடுக்காவில்லை.

இருப்பினும் மீண்டும் என்பிபி தோழர்கள் பொய்யான வாக்குறுதிகளுடன் தேர்தலிற்காக களத்தில் குதித்துள்ளனர். இவர்களிற்கு முதுகெலும்பு இருந்தால் அரசியல் கைதிகளின் விடுதலையின் பின்னர் இவர்கள் இந்தத் தேர்தலை எதிர்கொள்ளவேண்டும்.

தொடர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றிக்கொண்டு பொய்யான வாக்குறுதிகளை வழங்கிக்கொண்டிராமல் இந்த சித்திரவதையை இத்துடன் நிறுத்தி அவர்கள் வாழ்வதற்கு அனுமதிக்கவேண்டும்.

இதற்கு முன்னர் விடுதலையான எந்தவொரு அரசியல் கைதியும் இந்த சமூகத்திலே எந்தவொரு பிழையான நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. பொய்யான வாக்குறுதிகளை வழங்கிக்கொண்டு அரசியல் இலாபம் தேடும் நோக்கிலே இந்த ஆளும்தரப்பு நகரக்கூடாது.

அவர்களின் விடுதலைக்கு எந்த காரணமும் தடையாகயிருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் அனைத்து அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியினால் அவர்களிற்குப் பொதுமன்னிப்பு வழங்க முடியும். சட்டமா அதிபர் அவர்களிற்கு எதிரான வழக்குகளை தள்ளுபடிசெய்து அவர்களை விடுதலை செய்யலாம். இந்த வழக்குகளை வைத்து இழுத்தடிக்க சட்ட மா அதிபரிடம் போதுமான சாட்சிகள்ள் கிடையாது. சிங்களத்தில் பதியப்பட்ட வாக்குமூலங்களை அடிப்படையாகக்கொண்டே பலருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தண்டனையாகயிருந்தால்கூட அவர்கள் இரண்டு ஆயுள்தண்டனையை அவர்கள் எதிர்நோக்கி முடித்திருக்கின்றார்கள். எனவே அவர்களை விடுதலை செய்யவேண்டும் - என்றார்.

## வேட்புமனு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்துள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியினால் வழங்கப்பட்ட வேட்பு மனுவில் பெண் வேட்பாளர் ஒருவரின் சத்தியக்கூற்று சான்றுபடுத்தப்படதில் தவறு உள்ளதாகக் கூறி அந்தப் பெண் வேட்பாளரைப் பட்டியலில் இருந்து நீக்கியமையால், தேவையான பெண் பிரதிநிதித்துவம் இல்லை என மாநகர சபைக்கான வேட்பு மனுவை தேர்தல்கள் திணைக்களம் முற்றாக நிராகரித்தது.

வேட்பு மனுவில் தேவையான பெண் வேட்பாளர்களை உள்ளடக்கி இருந்தோம். ஆனால் ஒரு பெண் வேட்பாளரின் சத்தியக்கூற்றில் தவறு எனில் அவரை மாத்திரம் நீக்கி ஏனையோரை போட்டியிட அனுமதித்து இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் முழு வேட்பு மனுவையும் நிராகரித்து 48 வேட்பாளர்களின் ஜனநாயக உரிமையையும் மறுத்துள்ளார்கள் என தமிழ் மக்கள் கூட்டணியினர் கண்டனம் தெரிவித்து வந்தனர்.

இதற்கெதிராக நேற்று ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் ஊடாக உச்ச நீதிமன்றில் நேற்று அவர்கள் வழக்கு தொடர்ந்தனர். யாழ்ப்பாண மாநகர சபையில் , முன்னாள் முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணனை முதல்வர் வேட்பாளராகக் கொண்டு களமிறங்கிய தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பு மனுவே நிராகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பிரிவினைவாதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய இராச்சியம் எங்கள் போர் வெற்றி வீரர்களிற்கு எதிராகத் தடைகளை விதித்துள்ளது. இந்த விடயங்கள் எவையும் வெற்றிடத்தில் நிகழவில்லை. பிரிவினைவாதப் புலம்பெயர்ந்தோர் முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு மிகவும் சுறுசுறுப்பாகவும், மூலோபாயரீதியாகவும், விடாமுயற்சியுடனும் உள்ளனர்.

எங்களின் அரசியல்வாதிகள் சுயவிருப்பத்துடனோ அல்லது அறியாமையினாலோ அல்லது திட்டமிட்டோ அவர்களின் கரங்களில் சிக்கிக்கொள்வது வருந்தத்தக்க விடயம்.

உலகின் மிகக்கொடூரமான பயங்கரவாத அமைப்புகளில் ஒன்றைத் தோற்கடித்து, பல தசாப்தங்களாக குருதிச் சகதியை எதிர்கொண்ட எமது தேசத்திற்கு அமைதியையும் உறுதிப்பாட்டையும் கொண்டுவருவதற்கு பொறுப்பானவர்களின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் அரசியல் நோக்கத்திற்காக, இலாபத்திற்காக ஆபத்தான முறையில் சமரசம் செய்துவருகின்றோம் என்பது எனக்கு உண்மையிலேயே கவலையளிக்கின்றது.

ஐக்கியம் சுதந்திரத்திற்காக செய்யப்பட்ட தியாகங்களை மறந்தால் அது எவ்வளவு தூரம் நன்றிகெட்ட தேசமாக இருக்கமுடியும்?

இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாகவே விளங்கவேண்டும், இதில் எந்த விட்டுக்கொடுப்பிற்கும் இடமில்லை.

எங்கள் நாட்டின் இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கான எங்கள் அர்ப்பணிப்பு உறுதியானதாகயிருக்கவேண்டும்.

அனைத்து இலங்கையர்களும் இனமதமொழி பேதமின்றி கௌவரம் சமத்துவத்துடன் பரஸ்பர கௌரவத்துடன் வாழும் நாட்டைக்கட்டியெழுப்பும் அதேவேளை, வெளிப்படையான அல்லது நயவஞ்சகமான அனைத்துவகையான பிரிவினைவாதத்தையும் எதிர்ப்பதற்கான எங்களின் கூட்டுதீர்மானத்தை நாங்கள் வலுப்படுத்தவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.




## பிரிட்டன் தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் அமைப்பினை இலங்கையில் இல்லாதொழித்தாலும் அந்த அமைப்பின் கொள்கையினைக் கொண்டவர்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இன்றும் செல்வாக்குச் செலுத்துகின்றனர். விடுதலைப் புலிகள் அமைப்பின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பிரித்தானியாவில் வாழ்கின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் பிரித்தானியா பலமுறை எடுத்துரைத்தது. இருப்பினும் மஹிந்த ராஜபக்ச மேற்குலக நாடுகளின் அறிவுறுத்தலுக்கு அடிபணியாமல் நாட்டு மக்களுக்கு வழங்கிய ஆணைக்கு அமைய போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். இதன் பின்னரே ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஊடாக பிரித்தானியா இலங்கைக்கு எதிராக பல தீர்மானங்களைக் கொண்டு வந்தது. பிற்பட்ட காலங்களில் இலங்கைக்கு எதிராக பிரேரணைகளை கொண்டு வரும் நாடுகளுக்கு பிரித்தானியா முழுமையாக ஆதரித்துள்ளது.

முன்னாள் இராணுவ தளபதி சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய, கருணா அம்மான் ஆகியோர் மீது பிரிட்டன் விதித்துள்ள தடை முற்றிலும் ஒருதலைபட்சமானது. இந்தத் தீர்மானத்தை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னர் இவர்களின் நிலைப்பாட்டை பிரித்தானியா கோரியதாகத் தெரிவித்துள்ளது. தன்னிச்சையான முறையில் இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் இந்தத் தீர்மானத்தை இலங்கை ஆட்சியாளர்கள் முற்றாக நிராகரிக்க வேண்டும். எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தலை மையப்படுத்திய வகையில் புதிய பிரேரணை ஒன்றைக் கொண்டு வரவுள்ளதாக பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ- பசுபிக் பிராந்திய பணிப்பாளர் பென் மெல்லர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் உள்ளடக்கம் இலங்கைக்கு எதிரானதாகவே அமையும். நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி இலங்கைக்கு எதிரான செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன. சர்வதேச நீதிமன்றத்திற்கு இலங்கையைக் கொண்டுசெல்லும் செயற்பாடுகள் மறைமுகமாக முன்னெடுக்கப்படுகிறது. இவ்விடயத்தில் இலங்கை ஆளும்தரப்பு அரசியலுக்கு அப்பாற்பட்டு செயற்பட வேண்டும் என்றார்.

## ஆளும்தரப்பினது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவாலானதல்ல. மாறாக ஆளும்தரப்புக்குப் பெரும் சவால்.

1982ஆம் ஆண்டு விஜேவீர தேர்தலில் போட்டியிட்ட நாள் முதல் ஜே.வி.பியின் வாக்கு வங்கி 3 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் காரணமாகவே தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்தனர். அவ்வாறு வாக்களித்தவர்கள் இன்று அதிருப்தியிலுள்ளனர்.

அதேவேளை தேசிய மக்கள் சக்திக்கு கடந்த தேர்தல்களில் கிடைக்கப்பெற்ற வாக்குகள் இம்முறை சிதறப்போகின்றன. இவர்களின் வாக்குகள் பொது ஜன பெரமுன, கதிரை உள்ளிட்டவற்றுக்கே செல்லும்.

எமது வாக்கு வங்கியில் எந்தப் பிரச்சினையும் இல்லை. எனினும் கடந்த தேர்தல் வழங்கப்படாமலிருந்து 18 இலட்சம் வாக்குகளும் இம்முறை எமக்கே கிடைக்கும்.

நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு செல்லவுள்ளதோடு, தேர்தல் ஆணைக்குழுவுடனும் பேச்சு நடத்திருக்கின்றோம்.

ஐக்கியதேசியகட்சியுடனான பேச்சுக்களும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந்த தேர்தலை மாத்திரம் இலக்காகக் கொண்டு அன்றி, அந்தப் பேச்சுக்களை எதிர்கால அரசியலை இலக்காகக் கொண்டு முன்னெடுத்துச் செல்வோம்.

ஆளும்தரப்பு வரவு - செலவு திட்டத்தில் மக்களுக்கு எவ்வித நிவாரணங்களையும் வழங்காமல், புத்தாண்டுக்கு உணவுப் பொதி வழங்குகின்றது. இது தேர்தலை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டமாகும். தேர்தல் ஆணைக்குழு இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிக்க உங்களால் முடியுமா?

## ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இராமநாதன் அர்ச்சுனா கேள்வி



இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிக்க முடியுமா? ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கோரிக்கை முன்வைத்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஒருங்கிணைப்பு குழு தலைவர் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் பங்கேற்புடன் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக முப்படையினரால் கையகப்படுத்தப்பட்டு விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போது இந்தவிடயம் முன்வைக்கப்பட்டது .

குறிப்பாக நல்லூர், திருநெல்வேலி பாற்பண்ணை பகுதியில் தனியாருக்கு செந்த மான காணிகளும் நல்லூர் பிரதேச சபைக்கு செந்தமான காணி 2013 ஆண்டு இராணுவத்தில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த காணியை பெற்றுத்தருமாறு பிரதேசசபையினர், பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

குறிப்பாக ஆரம்பசுகாதாரநிலையம் அமைப்பதற்கு காணிவேண்டும் என வேண்டும் சுகாதார திணைக்களமும் கோரிக்கை முன்வைத்துள்ளது. இவற்றை விடுவித்தால் அதனை அமைக்க முடியும் என நல்லூர் பிரதேச செயலாளரும் தெரிவித்தார்.

இதன்போது கூட்டத்தில் கலந்து கொண்ட இரணுவ உயர் அதிகாரியிடமும் இது தொடர்பில் அமைச்சரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக கோரிக்கை எழுத்து மூலம் தருமாறு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முப்படையினரால் கையகப்படுத்தப்பட்டு விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பான விவரங்கள் கிராம அலுவலகர் ரீதியாக கோரப்படுத்தப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# ஏ.ரி.எம். அட்டையை திருடி யாழில் மது கொள்வனவு

## பெண் உட்பட நால்வர் விளக்கமறியலில்

வீடான்றில் இருந்து 95 ஆயிரம் ரூபா மற்றும் தன்னியக்க பணப்பரிமாற்ற அட்டை என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் பெண் உட்பட நால்வர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதியில் உள்ள ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஒருவரின் வீட்டிலேயே இந்தத் திருட்டு நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் அவர் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். விசாரணைகளின் அடிப்படையில் அந்த வீட்டில் பணிபுரிந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தொடர் விசாரணைகளிலும், பாதுகாப்புக் கெமராப் பதிவுகளின் அடிப்படையிலும் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பின்னர் கைதுசெய்யப்பட்ட மூவரும் திருடப்பட்ட தன்னியக்கப் பணப்பரி மாற்ற அட்டையைக் கொண்டு 20 ஆயிரம் ரூபாவை எடுத்து மதுபானம் கொள்வனவு செய்துள்ளமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் கோப்பாய் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனர்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# எத்தடை வரினும் யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் தொடரும்

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

மோசமான செயற்பாடுகள் மூலம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குழப்பியுள்ளார். இனிவரும் காலங்களில் தலைவருக்குரிய அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்துவேன் என்று அமைச்சரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்ட தலைவருமான சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல்வளங்கள் அமைச்சரும், ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் தலைவருமான சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணாநதன் இளங்குமரன், ஜெ.ரஜீவன், ஸ்ரீபவானந்தராஜா, சிவஞானம் ஸ்ரீதரன், இராமநாதன் அர்ச்சுனா, வட மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், உள்ளிட்டவர்களுடன் திணைக்களங்களின் பதவிநிலை அதிகாரிகள் பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், பாதுகாப்பு தரப்பின் அதிகாரிகள் மற்றும் பிரதேச அதிகாரிகள் என பலரும் கலந்துக்கொண்டனர்.

கூட்டம் முடிந்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் தெரிவித்ததாவது:

’ வரவு- செலவுத் திட்ட கூட்டத்தொடர் முடிவடைந்துள்ள நிலையில், யாழ்.மாவட்டத்துக்கு பாதீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு தொடர்பில் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பதற்காகவே இன்றைய (நேற்றைய) ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் ஏற்பாடு



செய்யப்பட்டிருந்தது.

மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்படவிருந்த இக்கூட்டத்தில் சிவன் பூஜையில் கரடி புகுந்ததுபோல சம்பவங்களும் இடம்பெற்றன.

தொல்லை தாங்க முடியாமல் எம்.பியொருவர் வெளியேறி சென்றுள்ளார். மேலும் சில அதிகாரிகள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

எவருடைய பேச்சுக்கும் கட்டுப்படாத நபரொருவரால்தான் இப்படி நடந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மோசமாக நடந்துகொண்டார். தனக்குள்ள தனிப்பட்ட பிரச்சினை காரணமாக சம்பந்தமில்லாத விடயங்களைக்கூட அவர் குறிப்பிட்டுள்ளார்.

எத்தடை வரினும் யாழ்.மாவட்டத்துக்குரிய அபிவிருத்தி திட்டங்கள் தொடரும். அவை உரிய வகையில் முன்னெடுக்கப்படும். ஒருங்கிணைப்புக்குழு தலைவருக்குள்ள அதிகாரம் இனி முழுமையாக பயன்படுத்தப்படும்.

சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் செய்திகள்







வரும். நாம் இதுபற்றி மக்களிடமே முறையிடுகின்றோம். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். - என்றார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2025இல் வெளியிடப்பெற்றது